## மேட்டூர் சார்பு நீதிமன்றம்

| O.S. No. 350/2019 | Date : 22.02.2023 | PW1 |
|---|---|---|
| Name: ஈஸ்வரன் | S/o. **முத்தாக்கவுண்டர்** | |
| Evidence Recorded Time: 11.16 A.M. to 11.45 A.M | | |

**1 முதல் 4 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :–**

என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொத்தை தரவேண்டும் என்று போட்டுள்ளேன். வேறு பரிகாரங்கள் கோரவில்லை என்றால் சரிதான். என்னென்ன சர்வே எண்களில் என்னென்ன விஸ்தீரணங்களை எனக்கு விற்பனை செய்ய சொல்லி கேட்டுள்ளேன் என்றால் சர்வே எண்.1245/5 ல் பு.ஏ.2.82 செண்ட் நிலத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளேன். என்னுடைய வழக்கில் 2.82 செண்டிற்கு பதிலாக 3 ஏக்கர் 16 செண்ட் நிலத்தை விற்பனை செய்த விவரத்தை சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். 16 அடி பாதை, கிணற்றிற்கு செல்லும் வண்டி பாதை, 20 தென்னை மரங்கள், இரண்டு கொலுமிச்சை மரங்கள், வாய்க்கால் பாதை ஆகியவை கூட்டாக உள்ளது என்றும், சொத்தை வேறு நபருக்கு விற்பனை செய்தால் எனக்கு பாதிப்பு ஏற்படும் என்ற விவரத்தை வழக்கில் சொல்லியுள்ளேனா என்றால் சொல்லியுள்ளேன். மேற்சொன்ன சர்வே எண்ணை தவிர வேறு சர்வே எண்களுக்கு வழக்கு தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்திற்கு அருகில் உள்ள இணை நிலம் என் சொத்து இல்லை என்றால் என் பெயரில் இல்லை, என் மகன் பெயரில் உள்ளது. புலஎண்.1245/1 என்னுடைய நிலம் என்றால் சரிதான். புலஎண்.1245/3 என் மகன் ஜீவாவின் நிலம் என்றால் சரிதான். புலஎண்.1245/4 நிலம் தேராஜுவிற்கும் ஜீவாவிற்கும் கூட்டாக பாத்தியப்பட்டு தற்போது 6–ம் பிரதிவாதி செந்தில்குமார் பெயரில் பட்டா எண்.1472 உள்ளது என்றால் சரியல்ல. புலஎண்.1245/4 ஐ பொறுத்து வரை என் மகன் ஜீவா கூட்டாக உள்ளதால் இந்த வழக்கில் அவரை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு சொத்து 03.11.1982–ம் தேதி பாகப்பிரிவினை பத்திரத்தின் படி என் தம்பி தேராஜுவிற்கு பாத்தியப்பட்டுள்ளது என்றால் சரிதான். பாகப்பிரிவினை பத்திரத்தில் F செட்யூல் சொத்து தேராஜுவிற்கு ஒதுக்கப்பட்டது என்றால் சரிதான். 4–ம் பிரதிவாதி கணேசனுக்கு சொத்தை விற்பனை செய்யும் காலம் வரை தேவராஜ் மற்றும் அவரது குடும்பத்தினர்தான் சொத்தை அனுபவித்து வந்தார்கள் என்றால் சரிதான். 25.09.2019–ல் 1 முதல் 3 பிரதிவாதிகள் 4–ம் பிரதிவாதி கணேசனுக்கு ஒரு விற்கிரைய ஒப்பந்தம் செய்து கொண்டார்கள் என்றால் சரிதான். 30.09.2019–ல் கணேசனுக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார்கள் என்றால் சரிதான். கணேசன் கிரையம் பெற்ற பிறகு நிலத்தை சுற்றி கம்பி வேலி போட்டுக்கொண்டார் என்றால் இல்லை. நான் மாமூலாக சென்று வந்த 16 அடி தடத்தை

புலங்கவிடாமல் தடுத்து அந்த தடத்தை அழித்து கம்பி வேலி போட்டுக்கொண்டார். இந்த விவரத்தை என்னுடைய தாவாவில் திருதப்பாடு செய்து பரிகாரம் கேட்டுள்ளேனா என்றால் கேட்டுள்ளேன். 16 அடி தடத்தை பொறுத்து ஏற்கனவே வழக்கு நடைபெற்று அதற்கு மேல்முறையீடு செய்தும் அதற்கும் தீர்ப்பு உள்ளது என்றால் சரிதான். அந்த தீர்ப்பின் அடிப்படையில் 16 அடி தடத்தை தடுத்துவிட்டார்கள் என்பது சம்மந்தமாக மேல்நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் சரிதான். நான் சொல்வது போல 16 அடி தடத்தை கணேசனோ, தேவராஜோ எந்த காலத்திலும் தடுக்கவில்லை என்றாலும், பொது சராவில் மேற்படி 16 அடி பாதை தெளிவாக சொல்லப்பட்டுள்ளது என்றாலும் அது சம்மந்தமாக நீதிமன்ற தீர்ப்புக்கள் அமலில் உள்ளதாலும் இன்றளவிலும் அந்த பாதை நடைமுறையில்தான் உள்ளது என்றாலும் நான் வழக்கிற்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. 4–ம் பிரதிவாதி கணேசன் சொத்தை விலைக்கு வாங்கி அவர் பெயரில் பட்டா பெற்று பின்பு 6–ம் பிரதிவாதிக்கு விற்பனை செய்து விட்டார் என்றால் சரிதான். தற்போது 6–ம் பிரதிவாதி அவருடைய பெயருக்கு பட்டா பெயர் மாற்றம் செய்து கொண்டு அவர்தான் அனுபவத்தில் உள்ளார் என்றால் சரிதான். கணேசன் பெயரில் உள்ள கிரைய பத்திரம் மோசடியானது என்று மாவட்ட பதிவாளரிடம் மனு கொடுத்தேனா என்றால் கொடுத்துள்ளேன். இந்த வழக்கு தாக்கல் செய்த பிறகுதான் மனு கொடுக்கப்பட்டது என்றால் சரிதான். என் மனு விசாரணைக்கு உகந்தது அல்ல என்றும் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளுமாறு முடிக்கப்பட்டது என்றால் சரிதான், அதன் பிறகு மேல்முறையீடு தாக்கல் செய்துள்ளேன். நான் தாவாவில் வாங்கும் முன்னுரிமை பரிகாரமும், சுவாதீனத்தை ஒப்படைக்கும் பரிகாரமும், கணேசன் பெயரில் உள்ள பத்திரத்தை ரத்து செய்ய கோரும் பரிகாரமும் எனக்கு கிடைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் தம்பி தேவராஜ் மீது உள்ள முன்விரோதத்தை கொண்டு தொடர்ந்து கணேசனுக்கு இடையூறு கொடுத்து வந்ததால் தான் அவர் செந்தில்குமாருக்கு நிலத்தை விற்பனை செய்துவிட்டார் என்றால் சரியல்ல. தடத்தை அடைத்துவிட்டார்கள் என்பதற்கு நீதிமன்ற ஆணையர் நியமனம் கோரி மனு தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் வாங்கும் முன்னிரிமை கோரும் பரிகாரம் கோரிவிட்டு நிரந்தர உறுத்துக்கட்டளை பரிகாரத்திற்கு நீதிமன்ற கட்டணம் செலுத்தாத காரணத்தினால் என் வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என் மகன் ஜீவாவை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்காத காரணத்தினால் நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. இந்த வழக்கு செலவு தொகையுடன் தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல.

<u>5–ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை :–</u>

5–ம் பிரதிவாதிக்கு எதிராக என்ன பரிகாரம் கோரியுள்ளேன் என்றால் சொத்தை மூன்றாம் நபருக்கு கிரையம் செய்யக்கூடாது என்று பரிகாரம் கோரியுள்ளேன். 1–ம்

பிரதிவாதி என் தம்பி ஆவார். எங்களுக்குள் குடும்ப பிரச்சனைக்காக வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் இல்லை. அசல் வழக்கு எண்.323/2004 வழக்கில் அரசு ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேனா என்றால் இல்லை. பாகப்பிரிவினை பத்திரத்தில் எழுதியுள்ள விவரம் 5–ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். 1–ம் பிரதிவாதி தன்னுடைய பாகத்தை யாருக்கு விற்பனை செய்கிறார் என்ற விவரம் 5–ம் பிரதிவாதிக்கு தெரியாது என்றால் சரிதான். 5–ம் பிரதிவாதி சரியான ஆவணங்களை ஒப்படைக்கும் போதும், சரியான முத்திரை வில்லை கட்டணம் செலுத்தி இருந்தாலும், வில்லங்கங்களை சரிபார்த்து பத்திரத்தை பதிவு செய்வது அவருடைய கடமை என்றால் சரிதான். என்னுடைய குடும்ப பிரச்சனைக்காக 5–ம் பிரதிவாதியை அவசியமில்லாமல் கட்சி சேர்த்துள்ளேன் என்றாலும் 5–ம் பிரதிவாதிக்கு எதிராக வழக்கு தள்ளுபடி செய்யப்படவேண்டும் என்றால் சரியல்ல. 5–ம் பிரதிவாதியிடம் சரியான ஆவணங்கள் ஒப்படைத்த காரணத்தினால் ஆவணங்களை முறையாக பதிவு செய்தார் என்றால் சரியல்ல.

(6–ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளின் பேரில் குறுக்கு விசாரணை தொடர்ச்சிக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

ஒம்/–PW1,

இதில் கண்ட சங்கதிகள் என் முன்னிலையில் சாட்சியிடம் படித்துக் காண்பிக்கப்பட்டு அவரால் சரியென ஒப்புக்கொள்ளப்பட்டு என் முன்னிலையில் கையொப்பம் /கைரேகை செய்தார்.

ஒம்/–S.முத்துராமன்,
சார்பு நீதிபதி, மேட்டூர்.